**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.343/2015**

**நாள்.22.01.2026**

**பி.வா.சா. 1- மகாராஜன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி செல்வராஜை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். வாதி செல்வராஜின் அப்பா மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையார் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் அப்பாவின் அப்பா பெயர் என்ன என்றால் வீரபுத்திர தேவர். வீரபுத்திர தேவருக்கு வாதி செல்வராஜின் அப்பா மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையார் மற்றும் பெரியமாடத்தி, சின்ன மாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள் ஆகிய 6 பேர் வாரிசுகள் என்றால் சரிதான். ஆண் வாரிசுகளில் என்னுடைய அப்பா கட்டாரித்தேவர் தான் மூத்தவர் என்றால் சரிதான். என்னுடைய அப்பா கட்டாரித்தேவருக்கு 2 மனைவிகள் முதல் மனைவி முத்தாத்தாள், 2 வது மனைவி சண்முகத்தாய் என்றால் சரிதான். முதல் மனைவி முத்தாத்தாள், 2 வது மனைவி சண்முகத்தாய் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். முதல் மனைவி முத்தாத்தாளுக்கு குழந்தைகள் இல்லாததால், எனது தாயாரான 2 வது மனைவி சண்முகத்தாயை எனது அப்பா திருமணம் செய்தார் என்றால் சரிதான். 2 வது மனைவி சண்முகத்தாயை திருமணம் செய்தபிறகு, சில வருடம் கழித்து முதல் மனைவி முத்தாத்தாளுக்கு பெண் குழந்தை அன்னத்தாய் பிறந்தது என்றால் சரிதான். எனது தாயாரான சண்முகத்தாய்க்கு ராமாத்தாள், மகாராஜன், சீனிப்பாண்டி, அன்னராஜன், வள்ளித்தாய் மற்றும் நான் மொத்தம் 6 பேர் வாரிசு என்றால் சரிதான். என் அப்பாவுக்கு உடன்பிறந்த தம்பி பாலுத்தேவருக்கு ராமர் தேவர் என்ற பட்டப்பெயர் உண்டு என்றால் சரிதான். என் அப்பாவுக்கு உடன்பிறந்த தம்பி பாலுத்தேவருக்கு ராமாத்தாள், வள்ளித்தாய், வேலுச்சாமி, மாரியப்பன், வாதி செல்வராஜ் ஆகிய 5 பேர் வாரிசு என்றால் சரிதான். என் அப்பாவுக்கு உடன்பிறந்த தம்பி பாலுத்தேவர் வாதி சிறிய வயதில் இருக்கும்போதே இறந்துவிட்டார் என்றால் சரிதான். பாலுத்தேவர் இறந்தபிறகு எனது தந்தை தான் பாலுத்தேவர் வாரிசுகளை வளர்த்தார் என்றால் சரிதான்.

வாதி செல்வராஜ் எத்தனை சென்டுக்கு வழக்குப் போட்டுள்ளார் என்றால் 89 சென்ட் சாட்சி தற்போது 99 சென்ட் என கூறுகிறார். வழக்குச் சொத்து இந்த வழக்கிற்கு முன்புவரை பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்து வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது எங்கு வேலை பார்த்தேன் என்றால் கேரளாவில் 30 வருடங்களாக பணியாற்றினேன். வாதி செல்வராஜ் வெளியூரில் தான் இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் வெளியூரில் இருந்ததால் 4, 5 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் விவசாயம் செய்து பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் விவசாயம் செய்யவேண்டும் என்றால் மழையை நம்பி தான் விவசாயம் செய்யவேண்டும் என்றால் சரிதான். 7 வது பிரதிவாதி கனித்தாயை தெரியுமா என்றால் தெரியும். 7 வது பிரதிவாதி கனித்தாய் எந்த ஊர் என்றால் மடத்துப்பட்டி. தாவா சொத்தில் மழையை நம்பி தான் விவசாயம் செய்யவேண்டும் என்பதால் 4, 5 பிரதிவாதிகள் 7 வது பிரதிவாதி கனித்தாய்க்கு தபசில் சொத்தை குத்தகைக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். தபசில் சொத்துக்கு அருகில் 7 வது பிரதிவாதி கனித்தாய்க்கு வேறு சொத்து உண்டா என்றால் ஆமாம், தபசில் சொத்துக்கு மேல்பக்கம் சொத்து உண்டு. 7 வது பிரதிவாதி கனித்தாய்க்கு பாத்தியப்பட்ட சொத்தில் கிணறு, பம்ப்செட், போர் உண்டா என்றால் இல்லை. தாவா சொத்தினை 7 வது பிரதிவாதி கனித்தாய் குத்தகைக்கு வாங்கி பாடுபட்டு வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் 7 வது பிரதிவாதி என்ன பயிர் செய்துள்ளார் என்றால் மக்காச்சோளம். தாவா சொத்தினை 7 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விபரம் எப்போது தெரியவந்தது என்றால் கொரோனா காலகட்டத்திற்கு பிறகு தெரியவந்தது. நான் விபரம் தெரிந்தபிறகு 7 வது பிரதிவாதியை கேட்டேனா என்றால் ஆமாம் அவர் இடத்தை 4, 5 பிரதிவாதிகளிடம் வாங்கிவிட்டதாக சொன்னார். நான் 7 வது பிரதிவாதியிடம் தபசில் சொத்தில் எனக்கு பங்கு உள்ள விபரத்தை சொன்னேனா என்றால் ஆமாம் அவர் பங்கு இல்லை என சொல்லிவிட்டார்.

தாவா சொத்தில் வாதி செல்வராஜூக்கு பங்கு உண்டு என்றால் பங்கு இல்லை சிறிய பிள்ளையாக இருக்கும்போதே பாகம் வைத்து தனியாக சென்றுவிட்டார்கள். தாவா சொத்திற்கு கட்டாரித்தேவர் பெயரில் வழக்கிற்கு முன்பு வரை பட்டா இருந்தது என்றால் சரிதான். 7 வது பிரதிவாதி தபசில் சொத்தை கிரையம் பெற்றபிறகு, அவர் பெயரும் பட்டாவில் சேர்ந்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி செல்வராஜூக்கு பங்கு உண்டு என் அப்பா மூத்தவர் என்பதால் அவர் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து தவிர வேறு சொத்து பூர்வீக சொத்து உண்டா என்றால் கிடையாது. ஆவரந்தை ஊரில் 4 பூர்வீக வீடுகள் உள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். ஆவரந்தை ஊரில் உள்ள 4 பூர்வீக வீடுகள் நான் சிறியவராக இருக்கும்போது பிரித்துக்கொடுத்துவிட்டார்கள் என்றால் ஆமாம். 4, 5 பிரதிவாதிகள் 7 வது பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் கொடுத்த விபரம் எனக்கும், வாதிக்கும் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி செல்வராஜூக்கு பங்கு உண்டு, எனக்கு, 7 வது பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது அதனால் வாதிக்கு வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**7 வது பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 18:38:50 +0530